செய்தி வெளியீடு எண். 01/2018 நாள் 10.01.2018

**காஞ்சிபுரம் மாவட்டத்திற்கான இறுதி வாக்காளர் பட்டியலை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா. இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார்.**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 01.01.2018-ஐ தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு இறுதி வாக்காளர் பட்டியல் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் அனைத்து வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகங்களில் இன்று (10.01.2018) வெளியிடப்பட்டது. இவ்விறுதி வாக்காளர் பட்டியலை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா.இ.ஆ.ப., அவர்கள் வெளியிட அதனை காஞ்சிபுரம் வருவாய் கோட்ட அலுவலர் திரு.க.ராஜீ அவர்கள் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்ச்சியின் போது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(தேர்தல்)(பொ), வட்டாட்சியர்,காஞ்சிபுரம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் பிரமுகர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

புதிய வாக்காளர்கள் 39,303 பெயர் சேர்க்கப்பட்டு, இறந்து போன/ இடம்பெயர்ந்த வாக்காளர்கள் 65,062 பெயர் நீக்கம் செய்யப்பட்டது. தற்போது 37,25,471 வாக்காளர் கொண்ட வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் ஆண் வாக்காளர்கள் எண்ணிக்கை 18,42,815. பெண் வாக்காளர்கள் எண்ணிக்கை 18,82,309. இதர வாக்காளர்களின் எண்ணிக்கை 347 ஆகும்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் அடங்கிய 11 சட்டமன்ற தொகுதிகளின் தற்போதைய வாக்காளர்களின் விவரம் பின்வருமாறு-

| சட்டமன்ற தொகுதியின் பெயர் | 10.01.2018 அன்றைய வாக்காளர்களின் விவரம். | | | |
|---|---|---|---|---|
| | ஆண்கள் | பெண்கள் | இதர | மொத்தம். |
| 27, சோழிங்கநல்லூர். | 3,13,818 | 3,10,471 | 76 | 6,24,365 |
| 28, ஆலந்தூர். | 1,76,922 | 1,78,712 | 06 | 3,55,640 |
| 29, திருப்பெரும்புதூர்(தனி). | 1,54,512 | 1,62,626 | 46 | 3,17,184 |
| 30, பல்லாவரம். | 2,07,878 | 2,08,459 | 25 | 4,16,362 |
| 31, தாம்பரம். | 1,95,131 | 1,95,452 | 35 | 3,90,618 |
| 32, செங்கல்பட்டு. | 1,90,362 | 1,96,047 | 41 | 3,86,450 |
| 33, திருப்போரூர். | 1,30,436 | 1,34,509 | 17 | 2,64,962 |
| 34, செய்யூர். | 1,06,187 | 1,08,684 | 29 | 2,14,900 |
| 35, மதுராந்தகம்(தனி). | 1,07,851 | 1,11,764 | 48 | 2,19,663 |
| 36, உத்திரமேரூர். | 1,17,445 | 1,24,421 | 13 | 2,41,879 |
| 37, காஞ்சிபுரம். | 1,42,273 | 1,51,164 | 11 | 2,93,448 |
| **மொத்தம்** | 18,42,815 | 18,82,309 | 347 | 37,25,471 |